**சீனா அபிவிருத்தி வங்கி நிதியளிக்கப்பட்ட முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் 3 - (கட்டம் II) - 2019**

சீனா அபிவிருத்தி வங்கி நிதியளிக்கப்பட்ட முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் 3 - (கட்டம் II) இன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றும் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை செயற்திட்டத்தின் அமுலாக்க முகவராக உள்ளது. முக்கிய நுழைவுகளை வழங்குகின்ற ஏற்கனவே உள்ள தேசிய வீதிகள் மற்றும் கிராமிய வீதிகளை மீள்நிர்மானித்தல்/ புணரமைத்தல் மற்றும் போக்குவரத்து உட்கட்டமைப்பு தரத்ததால் அளவிடுதல் மற்றும் முன்னேற்றப்பட்ட நுழைவு கிடைக்கக் கூடிய சேவைகள் பகுதியில் வசிக்கின்ற மக்களுக்காக சமூக பொருளாதார நன்மைகளின் எண்ணிக்கையை வழங்குதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 15,594.14 மில்லியனுக்கு சமனான யூ.எஸ்.டொலர் 117.66 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 13,253 மில்லியனுக்கு சமனான யூ.எஸ்.டொலர் 100 மில்லியன் சீன அபிவிருத்தி கூட்டுதாபனத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. பௌதீக முன்னேற்றம்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம்இ சீ38-வீஒ,சீ39-வீஒ, சீ40-வீஒ மற்றும் சீ41-வீஒ போன்ற ஒப்பந்த பொதிகளின் கீழான வீதியின் புனரமைப்பு முறையே 70 சதவீதம், 94 சதவீதம், 12 சதவீதம் மற்றும் 10 சதவீதம் மாத்திரமே மீளாய்வாண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. | செயற்திட்டத்தினால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடிய சாத்தியம். | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 04 மாறல்கள் வெவ்வேறான காலப்பகுதிகளில் வேலைகளை ஆரம்பிக்கின்றதுடன் அதன்படி, செயலாற்றலானது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாறுபடுகின்றது. இருப்பினும், பூர்தியாக்கல் சதவீதத்துடன் உடன்பட்டனர். | வீதி வேலைகளின் மிகுதி புனரமைப்பினை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | கூட்டு மொத்தம் ரூபா 210 மில்லியன் செயற்திட்டத்தின் வேலைப்பரப்பிற்குள் காணப்பட்டிறாத தன்ஹல்ல – வீரகெடிய மற்றும் வீரகெடிய – மித்தனிய வீதிகளின் நிர்மானத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. மேலும், இவ் இரு வீதிகளினதும் கையளிப்பு விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | 2015 சனவரி 08 இற்கு பிரகு வீதிகளின் நிர்மானம் கைவிடப்பட்டிருந்தது. அதன்படி, நிர்மான செயன்முறை நிறுத்திவைக்கப்பட்டிருந்த துடன் ஒப்பந்ததாரர் தளத்தினை கைவிட்டிருந்தார். எனவே, கையளிப்பு மற்றும் கையேற்பு பத்திரங்கள் இவ் இரு வீதிகளிற்கும் செயற்படுத்தப்படவில்லை. | புனரமைப்பு வேலைகளின் முழுமையினை உறதிப்படுத்தவும் செயற்திட்டத்தின் வேலைப்பரப்பிலில்லாத வேலைகளை செய்வதனை குறைக்கவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்ல் வேண்டும். |
| (ஆ) | வேறான கொடுப்பனவு உருப்படிகள் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் கிரயத்தினை மேற்கொள்ள ஒப்பந்ததாரரினை அனுமதிப்பமனூடாக வீதி புனரமைப்பு வேலைகள் மீதான அளவைப்பட்டியல்களில் செய்யப்பட்டிருந்தமை, ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் கீழான ஏற்பாடுகளிற்கு | ஒப்பந்ததாரர்களிற்கு தேவையற்ற நன்மைகள். | செயலாற்றல் பாதுகாப்பு ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட முன்னர் தேவைப்படுகின்றது, அதேநேரம் வெற்றிகரமான விலைமனுதாரர்கள் ஓர் உடன்படிக்கைக்குள் உள்ளாவதற்கு முன்னர் செயலாற்றல் பாதுகாப்பினை | அளவைகள் பட்டியலின் மதிப்பாய்வு விலைமனு ஆவணங்களை பிரசுரிப்பதற்கு முன்னர் பெறுகை நிபுனர் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் செய்யப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | முரணாக காணப்பட்டது. இதன்படி, கூட்டுமொத்தம் ரூபா 2.59 மில்லியன் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரங்களின் கிரயத்தினை மீளப்பெற்றுகொள்ள ஒப்பந்ததாரரிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | | பெறுவதற்கான செலவினை ஏற்படுத்த வேண்டிய தேவை காணப்பட்டது. | |
| (இ) | ஓர் செயற்பாட்டு திட்டம் தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இல.06/2015 இன் பிரகாரம் அவர்களது ஒப்படைக்கப்பட்ட கடமைகளின் படி தனிப்பட்ட வெளியீடுகளை அடயாளப்படுத்த தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்ட நடவடிக்கைகளின் முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் மற்றும் மிருதுவான செயற்பாட்டிற்கான ஓர் இலகு பாதை என்பன 2019 ஆம் ஆண்டிற்காக அடயாளப்படுத்தப்பட்டிருக்கவில் லை. அதன் பெறுபேறாக, செயற்திட்டத்தின் செயலாற்றல் ஒட்டுமொத்தம் வினைத்திறனான முறையில் கண்காணிக்கப்பட்டு மதிப்பிட முடியாமலிருந்தது. | செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | செயற்பாட்டு திட்டம் தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இல.06/2015 இன் பிரகாரம் எம்எஸ் செயற்திட்ட மென்பொருளை பயன்படுத்தி திட்டமிடல் பிரிவின் தேவைப்பாடுகளிற்க இணங்க தயாரிக்கப்பட்டிருந்தது. | செயற்பாட்டு திட்டம் சுற்றறிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் செயற்திட்டத்தின் செயலாற்றல் வினைத்திறனான முறையில் கண்கானிக்கப்பட்டு மதிப்பிடப்படலும் வேண்டும். |